**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 190/2020

நாள்: 03.10.2024

பெயர்: ரத்தினம் (பி.வா.சா.1) க/பெ: கதிர்வேல்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) நான் தா.பழூர் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பிப்ரவரி 2024 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறேன். நான் வழக்கு போட்ட காலத்தில் மேற்கண்ட அலுவலகத்தில் பணியில் இல்லை. தாவா சொத்தை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் 177.6 என காட்டப்பட்டுள்ள தா.பழூர் டூ சுத்தமல்லி செல்லும் பிராதான சாலை ஆகும். மேற்படி புலவரைபடத்தில் I என காட்டப்பட்டுள்ள இடத்திலிருந்து E,H என காட்டப்பட்டுள்ள பகுதி மேல்படி பிராதான சாலையிலிருந்து கோட்டியால் கிராமத்திற்கு செல்லும் கிராம சாலை. அதன் முகப்பு பகுதியில் சர்வே எண்.116/6 என குறிப்பிடப்பட்டுள்ள பகுதி கீழ்புற பகுதியில் 3.2 மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3.2 மீட்டர் என்றால் 10 அடி வரும். மேற்படி புலவரைபடத்தில் 7 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 3.0 மீட்டர் என காண்பிக்கப்பட்டுள்ளது.

2) சர்வே எண்.116/6 ல் புலவரைபடத்தில் 3.0 என்று குறிப்பிடப்பட்டுள்ள அளவானது ரோட்டிலிருந்து மேற்கண்ட சர்வே எண்ணில் வளைவு வரை காட்டுப்பட்டுள்ள இடத்திற்கானதா அல்லது சர்வே எண்.116/6 முழு விஸ்தீரனத்தின் நீளத்திற்கான அளவா என்பது எனக்கு தெரியாது. சர்வே எண்.116/7 க்கும் வடபுறமுள்ள சர்வே எண்.116/6 க்கான இடைப்பட்ட தூரத்தை நாங்கள் அளந்துப்பார்க்கவில்லை. அந்த இடைப்பட்ட தூரம் என்பது 2 மீட்டர் தான் என்றால் சரியல்ல. அதை விட அகலமாக இருக்கும். சர்வே எண்.116/6 க்கு மேல்புறம் அளவு 9.6 மீட்டர் என்று வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.116/11 ல் யார் வீடு உள்ளது என்றால் ராமசந்திரன் வீடு உள்ளது.

சர்வே எண்.116/10 காலியிடமாக உள்ளது. சர்வே எண்.116/10ல் புளியமரம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.116/11ல் ராமசந்திரன் வீடு உள்ளதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) வா.சா.ஆ.2 சர்வே எண்.116/10, சர்வே எண்.116/11 காலி நத்தம் 2C புளியமரம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட காலி நத்தம் 2C யில் ராமச்சந்திரன் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளது வாதிகள் வருவாய் துறைக்கு தெரியப்படுத்தியதால் ராமச்சந்திரன் விரோதம் கொண்டு வாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமித்து அனுபவம் செய்து வருவதை அப்புறப்படுத்துவதை தடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.116/6 என்பது சர்வே எண்.116/10, 116/11 உடன் முடிவடைந்துவிடுவதால் அங்கு வீடுகள் இல்லை. பொதுமக்கள் செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ராமச்சந்திரன் மற்றும் வேறு சிலர் அங்கு குடியிருந்து வருகிறார்கள். அதை பயன்படுத்தி வருகிறார்கள். சர்வே எண்.116/11ல் ராமச்சந்திரன் வீடு உள்ளதா என்பதை நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் நியமனம் செய்து நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டால் உண்மை தெரியவரும் என்றால் சரியதான்.

4) சர்வே எண்.11/15 ல் வாதிகள் குடியிருக்கிறார்கள் என்றால் சர்வே எண் எனக்கு ஒழுங்காக தெரியவில்லை. புலவரைபடத்தில் சர்வே எண்.116/6க்கு வடபுறத்தில் L shape யில் உள்ள இடத்தில் வாதிகள் வசித்து வருகிறார்கள். நான் பணியில் சேர்ந்த பிறகு வாதிகளை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்ற முயற்சி செய்தேனா என்றால் நான் பணியில் சேர்வதற்கு முன்பு வட்டார வளர்ச்சி அலுவலர் வாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்து ஆக்கிரமிப்பிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். 02.11.2020ல் அகற்றினார்கள் அந்த உத்தரவு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை அந்த உத்தரவு எங்கள் அலுவலகத்தில் இருக்கும். ஆக்கிரமிப்பிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலகருக்கு அதிகாரம் உள்ளதா என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை.

நான் சொல்வது போல் ஆக்கிரமிப்புகளை அகற்றவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் இல்லை என்றாலும், இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. BDO மட்டும் சென்று அகற்றவில்லை. ஒரு இடத்தை அகற்ற வேண்டும் என்றால் வட்டார வளர்ச்சி அலுவலர், தாசில்தார், காவல் துறை உதவியுடன் தான் அகற்றுவார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் மட்டும் அகற்ற மாட்டார்கள். நடந்த சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எங்கள் அதிகாரிகள் சொல்லியும், தாவா சொத்து இருக்கும் இடத்தில் விசாரித்ததன் மூலம் எனக்கு தெரியவந்தது.

5) தாவா சொத்து இருக்கும் இடத்தில் நான் யார் யாரை விசாரித்தேன் என்று என் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எந்த அதிகாரி எனக்கு சொன்னார் என்பதையும் சொல்லவில்லை. மேற்சொன்ன ராமச்சந்திரன் நிறைய புகார்கள் கொடுப்பார் என்றால் 1,2 கொடுத்துள்ளார். சர்வே எண்.116/6 ன் உடைய வடபுறம் வாதிகளுக்கு பாத்தியமான சர்வே எண்.11/15 ல் வாதிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமான சொத்து என்றாலும் அதை நத்தம் வகைபாடு செய்யப்பட்ட போது தவறுதலாக சர்வே எண்.116/6 சேர்த்து விட்டார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.116/6 என்பது முதலில் இருந்து தெருவாக தான் உள்ளது. வாதிகள் குடியிருக்கும் வீட்டிற்கு மேல்புறம் வாதிகளுக்கு பாத்தியமான ஒதுக்கப்பட்ட சொந்த பாதை உள்ளது என்றால் சரியல்ல. பாதையில்லை. நான் பூஸ்துதி அமைப்பை பார்க்காமலேயே பாதை இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய மேல் அதிகாரிகள் சொல்லிக் கொடுத்தது போல் உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் காலம் காலமாக வாதிகள் தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தானது மேல்புறம் 7 மீட்டரும், தென்புறம் 23.4 மீட்டரும் அகலத்திற்கு 77 சதுரமீட்டரில் பல ஆண்டுகளாக ஆடு மாடுகள் கட்டியும்,

குப்பை குழிகள் அமைத்தும், வைக்கோல்போர், கொட்டகை அமைத்தும், அனுபவத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதே போல் எனக்கும், என் மேல் அதிகாரிகளுக்கும் வாதிகள் பட்டா கேட்டு பல மனுக்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் ஆவணங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கேட்கும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகாமையில் எந்தவித வீடுகளும் இல்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சொந்தமான இடத்தை பாதை என வருவாய் துறையினர் மாற்றம் செய்த பின்பு வாதி இருக்கும் இடத்தை அகற்ற முயற்சிப்பது தவறு என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.